செய்தி வெளியீடு எண்: 625 நாள்:28.08.2020

**இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகம் , சென்னை– 106.**

**எம்.டி. (யோகாமற்றும் இயற்கை மருத்துவம்) பட்ட மேற்படிப்பு 2020 – ‘21 ஆம் கல்வியாண்டு**

**அறிவிக்கை**

சென்னை–106 அரசினர் யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் 2020–‘21 ஆம் கல்வியாண்டிற்கான மூன்றாண்டு எம்.டி. (யோகா மற்றும் இயற்கை மருத்துவம்) பட்டமேற்படிப்பிற்கென மொத்தமுள்ள 15 இருக்கைக்களுக்காக, தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

**2. சேர்க்கைக்கானகல்வித் தகுதி :**

விண்ணப்பதாரர் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக் கழகம் அல்லது பிறபதிவு பெற்ற மருத்துவ பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்ட யோகா மற்றும் இயற்கை மருத்துவ பட்டம் [BNYS] / இயற்கை மருத்துவ பட்டயம் [N.D.(OSM)] ஒன்றை பெற்றிருக்கவேண்டும். அதற்குரிய சான்று இணைக்கப்பட வேண்டும். விண்ணப்பதாரர் தனது பெயரை தமிழ்நாடு இந்தியமருத்துவக் கழகத்தில் (Tamil Nadu Board of Indian Medicine, Chennai 106 ) பதிவு செய்திருத்தல் வேண்டும். தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகம் தவிர பிற பல்கலைக்கழகத்தால் நடத்தப்பட்ட மருத்துவப் பட்டப்படிப்பு தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்திலிருந்து உரியதகுதிச் சான்று பெற்று அதனை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பவேண்டும்.

**3. விண்ணப்பிக்கும் முறை :**

எம்.டி.(யோகா மற்றும் இயற்கை மருத்துவம்) பட்டமேற்படிப்பு விண்ணப்ப படிவம் மற்றும் தகவல் தொகுப்பேட்டினை **www.tnhealth.tn.gov.in என்ற சுகாதாரத் துறையின் வலைதள முகவரி மூலமாக 31–08–2020 முதல் 30–09–2020 வரை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விண்ணப்பங்கள்**

**இவ்வியக்குநரகத்தாலோ, தேர்வுக் குழு அலுவலகத்தாலோ வழங்கப்பட மாட்டாது.** பதிவிறக்கம் செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் இணைப்புகளுடன் **விண்ணப்பக் கட்டணமாகிய ரூ.3,000/– (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்)** மதிப்புகொண்ட குறுக்கு கோடிட்ட தேசியமயமாக்கப்பட்ட வங்கி கேட்பு வரைவோலையுடன் இறுதி நாளுக்கு முன் வந்துசேர்ந்திட வேண்டும். தமிழ்நாட்டைச் சேர்ந்த ஆதிதிராவிடர் / ஆதிதிராவிட(அருந்ததியினர்) / பழங்குடியினர் இனவிண்ணப்பதாரர்கள் விண்ணப்பக் கட்டணமான **ரூ.3000/–**ஐ செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகின்றது. **குறுக்கு கோடிட்ட வங்கி கேட்பு வரைவோலை "இயக்குநர், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி, சென்னை 106'' என்றபெயரில்31–08–2020 அன்றோ அல்லது அதற்கு பின்னரோ பெறப்பட்டு சென்னையில் மாற்றத்தக்கதாக இருத்தல் வேண்டும்.**

4. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், தேவையான இணைப்புகளுடன் உரிய உறையில் "செயலாளர், தேர்வுக்குழு, இந்தியமருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை, அரும்பாக்கம், சென்னை 600 106'' என்ற முகவரிக்கு இறுதி நாளுக்கு முன் சமர்ப்பித்திட / வந்துசேர்ந்திட வேண்டும். அறிவிக்கப்பட்ட இறுதி நாள் மற்றும் நேரத்திற்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் அஞ்சல்துறை, கொரியர் சர்வீஸ் தாமதம் உட்பட எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

**பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம் பெற கடைசி நாள் 05–10–2020 பிற்பகல் 5.30 மணிவரை.**

**நுழைவுத் தேர்வுநாள் (தோராயமாக) : 18–10–2020முற்பகல் 9.30 மணி.**

மேலும், விவரங்களுக்கு இத்துறையின் வலைதளமான www.tnhealth.tn.gov.in இல்தொடர்புகொள்ளலாம்.

**இயக்குநர்,**
**இந்தியமருத்துவம் மற்றும் ஓமியோபதி,**
**சென்னை–106.**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**